கட்டுரைப் பகுதி

விடுமுறை விண்ணப்பம்

விடுநர்:

XXXX
ஆறாம் வகுப்பு XX பிரிவு,
பிங்க்ஸ் பப்ளிக் பள்ளி,
கஸ்தம்பாடி.

பெறுநர்:

திருமிகு, வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு,
ஆறாம் வகுப்பு XX பிரிவு,
பிங்க்ஸ் பப்ளிக் பள்ளி,
கஸ்தம்பாடி.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம், என் அக்காவுக்கு வருகின்ற XX.XX.XXXX அன்று திருமணம் நடைபெற உள்ளதால் XX.XX.XXXX மற்றும் XX.XX.XXXX ஆகிய இரண்டு நாட்கள் என்னால் பள்ளிக்கு வர இயலாது அதனால், எனக்கு விடுப்பு அளிக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி !

இடம்: கஸ்தம்பாடி, இப்படிக்கு,
தேதி: XX.XX.XXXX உண்மையுள்ள,
XXXX

Pinkz Public School
Next Generation School

## இயற்கையைப் பாதுகாப்போம்

இன்றைய சூழலில் நாம் இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில், சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடிவதில்லை. சுத்தமான நீரைக் குடிக்க முடியாத நிலை உள்ளது. நீர், மணல், காட்டு உயிரிகள், தாதுக்கள், புல்வெளிகள் போன்ற இயற்க்கை வளங்கள் எல்லாம் இன்று குறைந்துக் கொண்டு வருகின்றன.

### இயற்கையைப் பாதுகாக்க எனது கடமைகள்

- மரங்கள் நட்டு பராமரிப்பேன்.
- குடிநீரை வீணாக்க மாட்டேன்.
- மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன் படுத்துவேன்.
- நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்களைப் பயன் படுத்த மாட்டேன்.
- ஆறுகள், ஏரிகள், கடல்கள், குளங்கள் போன்றவற்றில் குப்பைகளைப் போட மாட்டேன்.
- மட்கும் குப்பை, மட்காத குப்பை என குப்பைகளைத் தரம் பிரித்துக் குப்பைத்தொட்டியில் போடுவேன்.
- திறந்த வெளியைக் கழிப்பிடமாக மாற்ற மாட்டேன்.
- பெற்றோரிடம் வாகனபுகைகளைக் குறைக்கச் சொல்வேன்.

காமராசர்

<u>முன்னுரை:</u>

“செயற்கரிய செய்வார் பெரியர்” என்னும் வள்ளுவரின் வாய்மொழிக் கேற்பச் செயற்கரிய செயல்கள் புரிந்து “ செயல் வீரர்” என்று புகழ்படுபவர் காமராசர். பாரதத்தின் விடுதலைக்காக மட்டுமல்லாமல், விடுதலை பெற்ற பாரதப் பெருநாட்டின் உயர்வுக்காகவும் அயராது பாடுபட்ட தலைவர்களுள் ஒருவர் காமராசர்.

<u>இளமைக்காலம்</u>

காமராசர் 1903 ஜூலை 15 ஆம் நாள் விருதுநகரில் பிறந்தார். தந்தை குமாரசாமி தாயார் சிவகாமி அம்மையார். தந்தையை இளமையிலேயே இழக்க காமராசர் தம் படிப்பை நிறுத்திவிட்டார். தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும், அரசியலறிவையும், நாட்டுப்பற்றையும் வளர்த்துக் கொண்டார்.

<u>கல்விப்பணி:</u>

“ கல்வி சிறந்த தமிழ்நாடு என்ற புகழ் பெற்றதாக இருந்தாலும், தமிழக மக்கள் அனைவரும் கற்றவராகவில்லையே என்று காமராசர் வேதனைப்பட்டார். அதனால், ஊர்தோறும் பள்ளிகளைத் திறந்தார். கல்வியின் அருமை பெருமைகளை அறிந்திருந்த காமராசர் கட்டாயக்கல்வி, இலவசக்கல்வி, பகல் உணவுடன் கூடிய கல்வி எனப் பல திட்டங்களை உருவாக்கினார்.

<u>நிறைவேற்றிய பிற திட்டங்கள்</u>

தமிழகமெங்கும் பல அணைகளைக் கட்டி நீர்வளத்தைப் பெருக்கினார், மின் உற்பத்தியை பெருக்கினார், நகரப்புற வீடு கட்டும் திட்டம், இலவச மருத்துவ வசதி முதலியவனவும் இவரால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

<u>முடிவுரை</u>

காமராசர் உயர் பண்புகளின் உறைவிடமாய் வாழ்ந்தவர். எளிய குடும்பத்தில் பிறந்தும் கடுமையான உழைப்பாலும், தன்னலமற்ற நாட்டுப் பற்றாலும் நாடு போற்றும் நல்ல தலைவராக விளங்கினார்.

Pinkz Public School
Next Generation School